பொதுசன
யாழ்ப்பாணம

பக்கங்கள் எட்டு

வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 23 வெள்ளிக்கிழமை (05 05 2000) VALAMPURI ஒலி: 138

★ விடுதலைப் புலிகளின் தாக்குதல் எதிரொலி

நாடெங்கிலும் யுத்தப் பிரகடனம்

அமைச்சரவை கூடித் தீர்மானம்!

விசேட வர்த்தமானி மூலம் அறிவிப்பு

(கொழும்பு)

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு படைத்தளத்தை இழந்த அரசு, தீவிரம் அடைந்து வரும் யுத்தத்திற்கு முகம் கொடுக்கும் வகையில் நாட்டை யுத்த நிலையில் வைத்திருப்பதற்கு தீர்மானித்துள்ளது.

அவசியமற்ற அபிவிருத்தி பணிகளை மூன்று மாத காலத்திற்கு இடைநிறுத்தி விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் முனைப்புடன் கவனம் செலுத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் அவர்களைவெற்றி கொள்வதற்கு சில துணிச்சலான கருமங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சரவைப் பேச்சாளர் மங்களசமரவீர அறிவித்துள்ளார்.

ஆனையிறவு பளை யுத்த களங்களில் அரசுக்கு ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

★ யாழ்- குடாநாட்டுக்கு கப்பல் மூலம்

பொருட்களை அனுப்புவதற்கு பாதுகாப்பு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

யாழ்.குடா நாட்டுக்கு உணவுப்பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்கள் யாவற்றையும் கப்பல் மூலமாக அனுப்புவதற்கு பாதுகாப்பு அமைச்சு இதுவரை வழங்கிவந்த 'அனுமதி வழங்கல்' நேற்று முன்தினம்(புதன் கிழமை)முதல் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது,

யாழ்ப்பாணத்தில் யுத்த நிலை தீவிரமடைந்து வருவதினால் பாதுகாப்பு நிலைமைகள்மோசமடைந்து வருவதை அடுத்தே குடாநாட்டுக்கு கப்பல் மூலம் பொருட்களை

(2ஆம் பக்கம் பார்க்க)

இந்தியப்படை இலங்கைக்கு சென்று தமிழரை அழிப்பதை அனுமதியோம்

கலைஞர் மு- கருணாநிதி கருத்து

(சென்னை)

இந்திய இராணுவத்தை மீண்டும் ஒருமுறை இலங்கைக்கு அனுப்பி அங்கு தமிழ் மக்களை அழிப்பதற்கு இந்தியா காரணமாவதை ஒருபோதும் அனுமதிக்க கூடாதென தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் செய்தியாளர்கள் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துக் கூறுகையில், கடந்த காலத்தில் இலங்கைக்கு இந்தியப்படையை அனுப்பிய போது ஏற்பட்ட இராணுவ

[8 ஆம் பக்கம் பார்க்க]

வெளிநாட்டுச் செய்தி ஊடகங்கள் மீதும் செய்தித் தணிக்கை அமுல்

(கொழும்பு)

கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் வெளிநாட்டு செய்தி ஊடகங்கள் மீது தணிக்கை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தநெருக்கடிகளைக் கையாளுவதற்காக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள பொதுமக்கள் பாதுகாப்பு

(8ஆம் பக்கம் பார்க்க)

கப்பல் சேவை இடம்பெற மாட்டாது

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான கப்பல் சேவை பாதுகாப்புக் காரணமாக மறு அறிவித்தல் வரை இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வருவதற்காக திருமலையில் தங்கியிருக்கும் சுமார் ஐயாயிரம் பயணிகளுக்கு தேவையான தங்குமிட வசதிகளையும் உணவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்புநகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் பிரதான அரச திணைக்களங்களுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு பிரதான தபால் நிலையத்தின் பணிகள் பாதுகாப்புக் காரணங்களை அடுத்து வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சு விடுத்த

(8ஆம் பக்கம் பக்கம் பார்க்க)

இஸ்ரேல் உதவியை அரசாங்கம் கோரியது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான போரை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசு இஸ்ரேல் நாட்டின் உதவியை நாடியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் உயர் மட்ட அதி

(8ஆம் பக்கம் பார்க்க).

இலங்கைக்கு இராணுவ, ஆயுத உதவியை இந்தியா ஒருபோதும் வழங்காது

தமிழக தலைவர்களிடம் வாஜ்பாய்

[புதுடில்லி]

இந்தியாவில் ஆட்சியிலிருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தமிழகக் கட்சிகளின் தலைவர்களுடன் இந்தியப்பிரதமர் வாஜ்பாய் யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் இந்தியா எடுக்க வேண்டிய

(8ஆம் பக்கம் பார்க்க)

150க்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் இராமநாதபுரம் சென்றனர்

(சென்னை)

யாழ்ப்பாணத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல்கள் தீவிரமடைந்ததை அடுத்து இந்தியாவிற்கு தமிழ் மக்கள் மீண்டும் அகதிகளாகச் செல்லத்தொடங்கியுள்ளனர்.

நேற்று தமிழகம் இராமநாதபுரத்திற்கு 150க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் அக

(8 ஆம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தானின் இராணுவ உதவியை இலங்கை அரசு கோரியதா?

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் போர் தீவிரமடைந்துவருவதை அடுத்து அரசாங்கம் பாகிஸ்தானிடம் இராணுவ உதவி கோரியிருப்பதாக பாகிஸ்தானிய வெளிநாட்டமைச்சு நேற்று அறிவித்துள்ளது. எவ்வாறான இராணுவ உதவியைக் கோரியுள்ளது என்று தெரிவிக்க மறுத்தபாகிஸ்தான் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர்,

(8ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைநிலைகுறித்துப் பேச கருணாநிதி நேற்று மாலை புதுடில்லி பயணம்

(சென்னை)

இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையை அடுத்தும் இந்தியா எடுத்த முடிவு குறித்தும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பேச்சு நடத்த தமிழக முதல்வர்மு. கருணாநிதி நேற்று மாலையே புதுடில்லி சென்றுள்ளார். இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்துப் பேச்சு நடத்த வருமாறு இந்தியப்பிரதமர் வாஜ்பாய்

(2ஆம் பக்கம் பார்க்க)

வலிகாமம் மேற்கில் பழைய காவல் அரண்கள் பலப்படுத்தப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப்பகுதியில் இராணுவத்தினர் முன்னர் அமைத்திருந்த காவலரண்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப்பலப்படுத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனையிறவு பளைப் பகுதிகளில் யுத்தம் தீவிரமடைந்து இருந்த போது இக் காவல் அரண்களைக் கைவிட்டு இராணுவத்தினர் அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ.)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 04 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

சாவகச்சேரி

141518 ஏ   141518 பி
145522 ஏ   146509 ஏ
146510 ஏ   146514 ஏ
146514 பி   146516 ஏ
146545 ஏ   146559 ஏ
146559 பி   146559 சி
146559 டி   146563 ஏ
146563 பி   146563 சி
146569 ஏ   146569 பி
146572 ஏ   146574 ஏ
146574 பி   146583 ஏ
146583 பி   146593 ஏ
146593 பி   146593 சி
146593 டி   146593 ஈ
146593 எவ்   147503 ஏ
147503 பி   147503 சி

யாழ்ப்பாணம்

130262 ஏ   136920 ஏ
136920 பி   140404 ஏ
140404 பி   142692 ஏ
142692 பி   142692 சி
142692 டி   142699 ஏ
142699 பி   142699 சி
142699 டி   142699 ஈ
142699 எவ்   142699 ஜி
142757 ஏ   142757 பி
142774 ஏ   142794 ஏ
142823 ஏ   142823 பி
142840 ஏ   142840 பி
142860 ஏ   142860 பி
142860 சி   142860 டி
142860 ஈ   142882 ஏ
142913 ஏ   142913 பி
142913 சி   142922 ஏ
142922 பி   142966 ஏ
142966 பி   142975 ஏ
142975 பி   142975 சி
142975 டி   142975 ஈ
142995 ஏ   142995 பி
142995 சி   142995 டி
143004 ஏ   143014 ஏ
143021 ஏ   143021 பி
143021 சி   143025 ஏ
143025 பி   143039 ஏ
143039 பி   143045 ஏ
143045 பி   143047 ஏ
143047 பி   143050 ஏ
143050 ஏ   143050 சி
143050 பி   133050 டி
143050 ஈ   143050 எவ்
143050 ஜி   143053 பி
143062 ஏ   143062 பி
143062 சி   143062 டி
143063 ஏ   143063 பி
143063 சி   143063 டி
143063 ஈ   143063 எவ்
143066 ஏ   143066 பி
143072 ஏ   143072 பி
143078 ஏ   143094 ஏ
143096 ஏ   143105 ஏ
143105 பி   143118 ஏ
143122 ஏ   143124 ஏ
143124 பி   143124 சி
143124 டி   143128 ஏ
143130 ஏ   143134 ஏ
143134 பி   143134 சி
143134 டி   143143 ஏ
143154 ஏ   143156 ஏ
143160 ஏ   143161 ஏ
143875 ஏ   143875 பி
147004 ஏ   14770 ஏ
14770 பி   147730 ஏ
147730 பி   147732 ஏ
147732 பி   147732 சி
147738 ஏ   147755 ஏ
147757 ஏ   147758 ஏ
147767 ஏ   147769 ஏ
147769 பி   147769 சி
147769 டி   147780 ஏ
147780 பி   147780 சி
147780 டி   147780 ஈ
147814 ஏ

நல்லூர்

142739 ஏ   142739 பி
142775 ஏ   142869 ஏ
142869 பி   143053 ஏ
143129 ஏ   143131 ஏ

(சு)

வடமராட்சி கிழக்கு குடும்பங்கள் பல நிவாரணமேதுமின்றி அல்லல் நிலை

(செம்பியன்பற்று)

அண்மையில் ஏற்பட்ட போர் காரணமாக வடமராட்சிக் கிழக்கில் இருந்து பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து வடமராட்சியிலும் யாழ்ப்பாணத்திலும் தமது உறவினர் நண்பர்கள் வீட்டில் வசித்து வருகின்றனர்.

இவர்களிற்கு இதுவரை எவ்வித நிவாரணப் பொருட்களும் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

தற்சமயம் தொலைபேசித் தொடர்பும் துண்டிக்கப்பட்டதால் வெளிநாட்டு உறவினருடனும் தொடர்பேதும் அற்றநிலையில் இவர்களிற்கு பணம் கிடைக்கவும் வழியுமில்லாதுள்ளது. நிவாரணமும் இல்லாத நிலையில் இங்குள்ளமக்கள் பெரிதும் கஷ்ரத்தை எதிர்நோக்குவதாக பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

(சி-42)

60பேருக்குபெற்றோலியகூட்டுத்தாபனத்தில் விரைவில் நியமனம் வழங்கப்படும்

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் அறுபது பேருக்கு உடனடியாக நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது விடயம் தொடர்பாக நேர்முகப் பரீட்சையில் சமூகமளித்தோருக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாண ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

ஈ. பி. டி. பி யின் பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே மேற்படி நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரின் விபரங்கள் தவறுகள் காணப்படின் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்குச் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் அழைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறுபட்ட தர நிலைக்குள்ளும் புதிதாக ஆட்கள் நியமிக்கப்படுவர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது,

நல்லைக் குமரன் மலருக்கான

கட்டுரைகள் - 2000

வழமைபோல் இவ்வருடமும் எமது குழுவினால் நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் வெளியிடப்படவுள்ள மேற்படி மலருக்குகந்த தரமான ஆக்கங்களைத் துறைசார்ந்த அறிஞர்கள், சைவப் பெரியார்கள், கல்விமான்கள் எதிர்வரும் 15-06.2000 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

(கி-296)

செய்தித் துளிகள்

இசைநாடா வெளியீட்டு விழா

(மந்துவில்)

யா/முத்துத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியர்களுக்கு ஓர் இசைமாலை இசைநாடா வெளியீட்டுவிழா நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10மணியளவில் தலைவர் த, சிவராஜா (அதிபர்) தலைமையில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும், திருமதி சண்முகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ந. அப்புலிங்கம் இசைநாடாவின் முதற் பிரதியையும், அ, குலேந்திரநாதன் சிறப்புப் பிரதியையும் பெறவுள்ளனர்.

(க-39)

மினிமுகாம் மூடப்பட்டது

அல்வாய் திக்கம் வடிசாலைக்கு அருகில் இருந்த இராணுவ மினிமுகாம் கடந்த மாதம் 22ஆம்திகதி மூடப்பட்டது.

அங்குள்ள தளபாடப்பொருட்கள் அனைத்தையும் இராணுவத்தினர் ஏற்றிக்கொண்டு உடுப்பிட்டிப் பகுதிக்கு இடமாற்றம் செய்ததாகத்தெரிய வருகிறது. [சு]

கலந்துரையாடல்

இடம்பெயர்வு மூலம் இடர்ப்படும் மக்களுக்கு இயன்ற வரை உதவுதல் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆதரவில் நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தில் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பேரவையின் தலைவர் வே. கெ. தனபாலன் ஆசிரியர் தலைமையில் நடைபெறும்,

சகல இந்து இளைஞர் மன்றம், சமயநிறுவனங்களின் பிரதிநிதிகளைத்தவறாது இக் கூட்டத்திற்குச் சமுகம் தருமாறு பேரவையின் பொதுச் செயலாளர் சிவஞானசெல்வர். சி. வரதராசாசி ஜே பி. கேட்டுள்ளார். [க]

தமிழ்த்தின போட்டிகள்

[கோப்பாய்]

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 12ம் 13ம் திகதிகளில் யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதுஇதற்கான ஏற்பாடுகளை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர்·இரா ஜகோபால் மேற்கொண்டு வருகிறார்

[க-79]

இன்றுதபால் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை வந்தடைந்த குமண கப்பலில் யாழ்ப்பாணத்துக்கானவெளியிடத் தபால் பொதிகள் 109 வந்து சேர்ந்துள்ளன.

இவை அனைத்தும் இன்று வெள்ளிக்கிழமை தரம்பிரித்து விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன்யாழ்.மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்கான 62 தபாற் பொதிகள் இங்கிருந்து காங்கேசன் துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் யாழ் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஐ-59]

சுகாதாரம் பேணா நிலை

(உடுவில்

உடுவில் பகுதியில் சில வர்த்தகர்ள் சுகாதார முறைப்படி தயாரிக்கப்படாத ஐஸ் வகைகளை விற்பனை செய்து வருவதாக முறையிடப்படுகிறது.

சுகாதார முறை பேணாத இச்செயற்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்படுகிறது.

(ப-15-சி)

கண்டெடுக்கப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நகுலேஸ்வராவீதி, கீரிமலையைச்சேர்ந்த வாமதேவி ஐயாத்துரை என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் சுன்னாகத்தில் கண்டெடுக்கப்பட்டு; இல. 310, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரங்காட்டி அங்கு பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

[அளவெட்டி]

கந்தரோடை சனசமூக நிலைய ஸ்ரீ சுப்பிரமணியம் வாசிகசாலை வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிருவாகசபைத்தெரிவும் நாளை சனிக்கிழமை பி.ப.4 00 மணிக்கு, தலைவர் சி.மகேந்திரன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது:

வாசிகசாலையின் 50வது ஆண்டுநிறைவினையொட்டி, பொன்விழா ஆண்டின் வேலைத்திட்டங்கள் தொடர்பான தீர்மானங்களும் இக்கூட்டத்தில் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(செ-112)

இலங்கை செஞ்சிலுவை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரால் இம்மாதம் 8 ஆம் திகதி இயக்கஸ்தாபகர் ஹென்றி டுனான்ட்டின் பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ளனர்து.

பேராசிரியர் வ. கே. கனேசலிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வு இருபாலையில் (யாழ். பருத்தித்துறை வீதியில்) புதிய ஆரம்ப சுகாதார கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2. 30 மணியளவில் இடம்பெற உள்ளது.

யாழ். அரசஅதிபர் கே.சண்முகநாதன், சர்வதேசச்செஞ்சிலுவைச்சங்க யாழ். பிரதிநிதி றொப்ட்றோவன், கோப்பாய் பிரதேசசெயலர் கே. சேதீஸ்வரன், வைத்தியகலாநிதி வே. தியாகராசா ஆகிய பிரமுகர்கள் இவ் வைபவத்தில் கலந்துகொள்வார்.

176 நாடுகளில் இவ்விழா கொண்டாடப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது

(க)

பலாலியின் யாழ்,சேவை

[ஈச்சமோட்டை]

பலாலியிலிருந்து இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தால் ஒலிபரப்பப்படும் யாழ். சேவை கடந்த புதன்கிழமை முதல் இடம்பெறவில்லை.

இச்சேவை நடைபெறாததற்கான காரணம் தெரியவரவில்லை. (சி-59)

வருடாந்த பொங்கல் உற்சவம்

(செம்பியன் பற்று)

பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை இறுதிப் பூஜைகள் நடைபெறவுள்ளது. (செ-42)

தரங்குறைந்த அப்பளம் விற்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

தரம்குறைந்த அப்பளங்கள் விற்கப்படுவதாக பாவனையாளர் மத்தியில் புகார் தெரிவிக்கப்படுகிறது

கோப்பாய், கல்வியங்காடு இருபாலை ஆகியபகுதிகளிலேயே மேற்படி தரம் குறைந்த அப்பளங்கள் பெருமளவில் விற்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரே தயாரிப்பைபலப்பல லேபில்களில் விற்பனை செய்யப்படுவதாகவும்புகார் தெரிவிக்கப்படுகிறது.

[க]

சண்டிலிப்பாயில் மீண்டும் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்

[யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய் பகுதியில் இருந்து கடந்தவாரம் வெளியேறிய இராணுவத்தினர் மீண்டும் அதே இராணுவ முகாமில் நேற்றுக் காலை 11. மணி முதல்முகாமிட்டுள்ளனர்.

இவர்கள் முகாம் சூழலை தீவிரமாகபரிசோதித்த பின்பு முகாமிற்குள் நுழைந்து குடிபுகுந்தனர். (க-12)

பொருட்களை...

அனுப்புவதற்குவழங்கப்பட்டு வந்த அனுமதியை நேற்று முதல் பாதுகாப்பு அமைச்சு இடைநிறுத்தி உள்ளதுடன் மறு அறிவித்தல் வரை அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுஒரு சில பொருட்களுக்கு மட்டுமே கப்பல்மூலம் அனுப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய ஏற்பாட்டின்படி இனிமேல் குடா நாட்டுக்கு அனுப்பப்படும் பொருட்கள் பலவற்றுக்கு தடைவிதிக்கப்படலாம் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

இலங்கை...

நேற்று முன்தினமிரவு விடுத்த அழைப்பை அடுத்தே கருணாநிதி புதுடில்லி செல்வதாக அறிவிக்கப்படுகின்றது, இவர் இன்று வாஜ்பாயைச் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-ச)

இந்திய...

குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது இராணுவத்தினர் குடாநாட்டில் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இலங்கை இராணுவத்திற்கு மீள்சக்தி இந்திய ஒத்துழைப்பு அவசியமானது

ஜெனரல் மேத்தா சொல்கிறார்

"இனப் பிரச்சினை இலங்கையின் உள்விவகாரமென்ற இந்தியாவின் நிலைப்பாடு தூரநோக்கற்றது" என்று இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படையின் உயரதிகாரியாகப் பணியாற்றிய ஜெனரல் மேத்தா கூறியுள்ளார்.

"யாழ்ப்பாணத்தையும் அதன் பின்னர் திருகோணமலையையும் கைப்பற்றுவது விடுதலைப்புலிகளின் அடுத்த இலக்காக இருக்கலாம்" என 'டைம்ஸ் ஒவ் இன்டியா' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ள அவர் புலிகளிடம் திருகோணமலை வீழ்ச்சியுறுமானால் இலங்கை துண்டாடப்படுவதற்கு அது வழிவகுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

"இலங்கை இராணுவத்திற்கு மீள்சக்தி வழங்குவதற்கும்" பயிற்சியளிப்பதற்கும் இந்தியாவின் ஒத்துழைப்பு தேவையானதாகும் புலிகளின் "ஓயாத அலைகள்" நடவடிக்கைக்கு ஈடுகட்டக்கூடியதான தாக்குதல் சக்தியை வழங்க வேண்டிய நிலைமை உள்ளது. ஆனையிறவின் வீழ்ச்சியானது யுத்தத்தில் ஏற்பட்டுள்ள மிக மோசமான அரசியல் நெருக்கடியாகும்.

மடமை

விடுதலைப் புலிகளைக் குறைத்து மதிப்பிடுவது மடமைத்தனமானதாகும். கடந்த நான்கு வருடங்களாக மிகக் கவனமாக அவ்வியக்கம் வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வருட முடிவுக்குள் தமது நடவடிக்கைத் திட்டங்களைப் புலிகள் விரிவுபடுத்தலாம். அதேவேளை வடக்கில் ஏற்பட்ட பின்னடைவுகளால் ஜே.வி.பி. தன் நடவடிக்கைகளைத் தெற்கில் அதிகரிக்கச் செய்யலாம் அத்துடன் தமிழர்களுக்கெதிரான கலவரங்களும் ஏற்படலாம்.

திருமலைத் துறைமுகம்

இராணுவ நடவடிக்கைக்கு இந்தியாவின் உதவியைப் பெறுவதற்குப் பதிலாக திருகோணமலைத் துறைமுகத்தை நீண்டகாலக் குத்தகைக்கு இந்தியாவுக்கு வழங்கலாம் என்ற யோசனையை இந்தியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தியா இலங்கையைக் கைகழுவி விட்டது. இலங்கைக்கு இராணுவஉதவி அவசரமாகத் தேவைப்படும் நிலையில் இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஜெனரல் மேத்தா 'டைம்ஸ் ஒவ் இன்டியா'வுக்குத் தெரிவித்துள்ளார்.'

(சி)

தென்மராட்சியின் பலபகுதிகளிலிருந்து மக்கள் பெருமளவில் இடம் பெயர்வு

விடுதலைப் புலிகளின் அறிவிப்பைத் தொடர்ந்து கொடிகாமம், அல்லாரை, கச்சாய், மீசாலை மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் உயிரைப் பாதுகாக்கும் நோக்குடன் தத்தமது உடைமைகளுடன் இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

இதேவேளை கொடிகாமத்தை அண்டிய பகுதிகளில் பயங்கரமான குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மிருசுவில், உஷன் பகுதியில் இருந்து ஏற்கனவேமக்கள் வெளியேறி இருப்பதாகவும், அப்பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதாகவும் சாவகச்சேரி நகர்ப்பகுதியிலுள்ள கடைகளில் இருந்து பொருட்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு இடம் நகர்த்தப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[ந-4]

உலக எழுத்தாளர் வரிசையில் புதுமைப்பித்தனுக்கு இடம் உண்டு

தேவராஜ் எம். பி. புகழாரம்

[கொழும்பு]

"சொல்லும் விஷயத்தை மிகவும் சூசகமாகச் சொல்லும் ஆற்றல் மிக்க சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் இவர் உலக எழுத்தாளர் வரிசையிலே ஏனைய எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்."

இவ்வாறு கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி. பி. தேவராஜ் கொழும்பு பாரதிகலாமன்ற ஏற்பாட்டில் நடைபெற்ற புதுமைப்பித்தன் நினைவு விழாவில் பேசுகையில் கூறினார்.

"அவர் மேலும் பேசுகையில் தமிழுக்கு அரும்பங்காற்றும் வகையில் இலக்கிய சிந்தனையையும் இலக்கிய ரசனையையும் ஆர்வத்தையும் மேம்படுத்த இவ்வாறான இலக்கிய நிகழ்வுகள் அவசியமாகின்றன" என்றும் அவர் தனது உரையில் கூறினார்.

(சி)

குமார்கொலை; மேலதிக நடவடிக்கைப் பொறுப்பு பாதுகாப்பு செயலரிடம்

ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

"குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகலபொறுப்புக்களையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைத்துவிட்டதாக ஜனாதிபதி தமக்குத் தெரிவித்துள்ளதாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் என். குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இக்கொலை தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும்மென ஜனாதிபதிக்கு காங்கிரஸ் கட்சித்தலைவர் விநாயகமூர்த்தி அப்பாதுரை பலதடவைகள் விடுத்துள்ள கோரிக்கைக்கு நேர்மாறாக ஜனாதிபதியின் பதில் அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக புலனாய்வுப் பிரிவினரால் நடத்தப்படும் விசாரணைகள் தமக்குத் திருப்திதரவில்லை என நாம் ஜனாதிபதிக்குத் தெரிவித்திருந்ததை முற்றிலும் நிராகரித்த நிலையிலேயே இப்பொறுப்புகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

(சி)

தேன் விற்கவந்த தமிழ் வாலிபர் சந்தேகத்தின் பேரில் கைதானார்

(கண்டி)

தேன் விற்கச்சென்ற தமிழ் வாலிபர் ஒருவர் விதடுலைப் புலிச்சந்தேக நபர் என கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டிக்கச்சேரியில் அமைந்துள்ள '[illegible]' இயக்க அலுவலகத்தில் தேன் விற்பதற்காக வந்த தமிழ் வாலிபரே சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ளார்.

இவர் அனுராதபுரத்தைச் சேர்ந்தவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

(சி)

நடவடிக்கை

[கரணவாய்]

வடமராட்சிதெற்கு-மேற்கு பிரதேசசபை, உடுப்பிட்டி உப அலுவலகம்ஆகியவற்றின் எல்லைக்குட்பட்ட வியாபார நிறுவனங்களின் அளவை நிறுத்தல் கருவிகள் என்பவற்றிற்கு யாழ். கச்சேரி திணைக்களத்தால் முத்திரை குத்தும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

[சி-27]

எச்சரிக்கைவாசகம்

[கரணவாய்]

உடுப்பிட்டி இமையாணன் போன்ற பகுதிகள்தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினரின் தேசத்துரோகிகளிற்கான கடைசி எச்சரிக்கை எனும் வாசகம் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் காணப்படுகின்றன.

இதன் எதிரொலியாக உடுப்பிட்டிப்பகுதிஇராணுவத்தால் சுற்றிவளைத்து சோதனையிடப்பட்டு விசாரணை செய்த பின்னர் கைதானோர் விடுதலை செய்யப்பட்டனர்.

(சி-27)

இடமாற்றம்

(புலோலி)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் கலாசார உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய இருவரும் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

செல்வி ஏ மிலாசினி மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கும் செல்வி எஸ். சுகுணா கரவெட்டி பிரதேசசெயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

[சி-52]

நாய்களுக்குத் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிரால் மாநகரசபை எல்லைக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் பணியில் இன்று வெள்ளிக்கிழமை 8. 30 மணி தொடக்கம் 12. 30 மணி வரை கொழும்புத்துறை சனசமூக நிலையத்திலும் பி. ப. 2. 00 மணி தொடக்கம் 4. 30 மணி வரை கண்டி வீதி அரியாலை மகப்பேற்று நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

(செ)

எழில் கொஞ்சும் வெளிநாட்டு பறவைகள் யாழ். கடல் நீரேரியில் முற்றுகை

[மந்துவில்]

கைதடிப் பாலம், வண்ணாத்திப்பாலம் உள்ளிட்ட யாழ். குடாநாட்டு கடல் நீரேரிப் பகுதிகளில் எழில்கொஞ்சும் வெளிநாட்டு பறவையினங்களின் நடமாட்டங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இப்பாதையூடாக செல்லும் பயணிகள் இப்பறவைகளின் அழகுமிகு நடமாட்டங்களை கண்டுகளிக்கின்றனர்.

சைப்பீரியப் பறவைகள் என அழைக்கப்படும் இப்பறவையினங்கள் காலத்திற்குக் காலம் இலங்கை போன்ற நாடுகளிற்கு கூட்டாக இடம்பெயர்வது வழமையான ஒரு நிகழ்வு என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

காலநிலை வேறுபாடுகளை அனுசரித்தே இப்பறவையினங்கள் இவ்வாறு இடம் பெயர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[க-39]

மாவை சேனாதிராஜா எம்.பி. வவுனியாவுக்கு விஜயம் செய்தார்

(வவுனியா)

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கடந்த திங்கட்கிழமை வவுனியாவுக்கு விஜயம்செய்து அன்றுமாலையே கொழும்பு திரும்பினார்.

கூட்டணியின் வவுனியா கிளைஅலுவலகத்திற்கு விஜயம்செய்த அவர் கட்சிப்பிரமுகர்களுடன் வவுனியாவின் தற்போதைய நிலவரம் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

அடுத்தசில தினங்களில் வவுனியாவுக்கு மீண்டும் விஜயம்செய்து சிலதினங்கள் தங்கியிருந்து மக்களுடைய பிரச்சினைகள், நலன்புரிநிலையங்களில் மக்கள்படும் கஷ்டங்கள்குறித்து விரிவாக ஆராய்வார்எனத் தெரிவிக்கப்பட்டது.

(சி)

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் அங்குரார்ப்பணம்

(கரணவாய்)

வடமராட்சிதெற்கு-மேற்கு செயலர் பிரிவு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் கரணவாய் கிழக்கு நாவலர் மடம் வித்தியாலயத்தில் புலோலி கால் நடை வளர்ப்போர்கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.மு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புலோலி கால்நடைத்திணைக்கள வைத்திய கலாநிதி திருமதி பு. தங்கராசாவும் யாழ்.மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர்.

பின் வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு சி.வீரசிங்கம் உப- தலைவர் ம.ச.சட்டநாதக் குருக்கள் செயலாளர் தா.மகாலிங்கம் பொருளாளர் திருமதி ஜெ. சுயாதா மேலும் மூன்று நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(சி-27)

வெளியிடங்களுக்கு மரணநிகழ்வு செய்திகளையே அனுப்ப இயலும்

செஞ்சிலுவை தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தம்மால் மரணம் சம்பந்தமான செய்திகளையே பிற இடங்களுக்கு அனுப்பமுடியும் என்று செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு மரணச்சம்பவம் தொடர்பான அத்தாட்சிப் படுத்தப்பட்ட சான்றிதழ் மற்றும் கிராம சேவகரின் அத்தாட்சி என்பன அவசியமாகும் எனவும் மேற்படி அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ். குடாநாட்டில் தற்போது தொலைபேசி சேவைகள் சீர்குலைந்துள்ளமையால் பொது மக்கள் தமது அவசரச்செய்திகளைப் பரிமாறிக் கொள்ளச் சிரமப்படுவதும்நேற்றுமுன்தினம் யாழ் செயலகத்திற்குக் குறிப்பிட்ட நேரம் தொலைபேசி தொடர்பு வழங்க ரெலிக்கொம்இணங்கியிருந்தும் பின் அத்தொடர்புவழங்கப்படாததால் புனர்வாழ்வுப் பகுதிப் பணிகள் பாதிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கவை.

[சி-3]

சட்டவிரோத மின் பாவனை: ராணுவம் தலையிட்டு நடவடிக்கை

[கரணவாய்]

கடந்த புதன்கிழமை கரணவாய்ப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின் சாரபாவனையில் ஈடுபட்டவர்களது வீடுகளுக்கு இராணுவத்தினர் சென்று மின்வயர்களை அறுத்துஎறிந்ததோடு வீட்டு உரிமையாளர்களின் அடையாள அட்டைகளையும் பறிமுதல் செய்து கொண்டு சென்றுள்ளனர்.

அண்மைக் காலமாக இப்படியானவர்களின் செயற்பாட்டால் இப்பகுதிக்கு சீராக மின்சாரம் கிடைப்பதில்லை அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

(சி-27)

கருத்தரங்கு

பலாலி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி ஆசிரிய மாணவருக்கு சிறுவர் உரிமைகள் பற்றிய கருத்தரங்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் கடந்த 4ஆம் திகதி வியாழன் தொடக்கம் நடைபெறுகிறது

இக்கருத்தரங்கு தொடர்ந்தும் நான்கு தினங்களுக்கும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இக்கருத்தரங்கில் சகல நெறியினரும் பங்குபற்றுகின்றனர்.

(க-39)

வியட்நாம்

முன்னாள் பிரதமர் டொங் மரணம்

மக்களிடையே பெரும் குழப்பம்

(ஹனோய்)

வியட்நாமின் முன்னாள் பிரதமரும் அந்நாட்டின் சுதந்திரப் பேராட்ட வீரருமான பாம்வாடொங்கின் மரணம் குறித்த நேரத்தில் அறிவிக்கப்படாமையானது மக்களிடையே பெரும் குழப்பத்தினைத் தோற்றுவித்துள்ளது.

94வயதான டொங் கடந்த மாதம் 29 ஆம் திகதி இறந்த போதிலும் 2 தினங்கள் கழித்தே இவ்விடயம் நாட்டு மக்களிடையே அறிவிக்கப்பட்டது.

இவரது மரணம் இரகசியமாக வைக்கப்பட்டது குறித்து வியட்நாமியர் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியுள்ளனர்.

மரணமடைந்த மறுதினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வியட்நாமின் 25 வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களையும் மேதினக் கொண்டாட்டங்களையும் குழப்பிவிடக்கூடாது என்ற காரணத்துக்காகவே இவ்வாறு மரணம் தொடர்பான செய்திகளைக் காலம் தாழ்த்தி அறிவித்ததாக அதிகாரிகள் நியாயப்படுத்தியுள்ளனர்.

இதேசமயம் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் டொங் மரணமானதாக கூறப்பட்ட போதிலும் மரணத்துக்கான காரணம் பற்றியசந்தேகமும் அந்தநாட்டவரிடையே எழுந்திருப்பதாகத் தெரியவருகிறது. (உ)

உலக தரிசனம்

கோவைச் சிறையில்,

வெள்ளிப் புதையல், மகாராணியின் உருவம் பொறித்த வெள்ளிப் பணம் மீட்பு

(சென்னை)

தமிழகத்தில் கோவை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த கைதிகளுக்கு, வெள்ளி நாணயப் புதையல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சிறைச்சாலை வளவு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிகாரியின் அனுமதியின்றி நிலத்தில் சிறு குழி திடத் தோண்டக் கூடாது என்ற கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறை வளாகத்தைத் துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சிறைக்கைதிகள் சிலர் தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்காக குழி தோண்டிய வேளையில் சிறிய செப்புப் பானை தென்பட்டதாகவும் அதனுள் விக்டோரியா மகாராணியின் உருவம் பொறித்த 1877ம் ஆண்டு நாணயங்கள் நான்கும், 1802 ஆம் ஆண்டு முத்திரையிடப்பட்ட ஒரு நாணயமும் கிடைத்ததாகவும் கோவை மத்திய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, வெள்ளி நாணயப் புதையல் கிடைத்ததைத் தொடர்ந்து அங்கு தங்கப் புதையல்களும் இருக்கலாம் என்ற நம்பிக்கை எழுந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ)

வல்லரசு நாடுகள் உறுதி

[லண்டன்]

சர்வதேச ரீதியில் எழுந்துள்ள கடும் கண்டனங்களை அடுத்து முக்கிய அணுவல்லரசுநாடுகளான அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியன தம்மிடமுள்ள அணுவாயுதங்களை அழிக்கப்போவதாக உறுதியளித்துள்ளன. [உ]

பாக். தயாரிக்கும் கதிர்வீச்சுகுண்டுகள் பல நாடுகளுக்கு அச்சுறுத்தல்.

வோஷிங்டன் ரைம்ஸ்தகவல்

(வோஷிங்டன்)

"அணுவாயுதக் கடத்தல்கள், தீவிரவாத நடவடிக்கைகள் என்பன ஈரான், கஸகஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சர்வசாதாரணமாக நடைபெறுவதாக ''வோஷிங்டன் ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் அமெரிக்கப் பாதுகாப்புத் தொழில்நுட்ப முன்னாள் தலைவர் ஸ்ரீவன் டி பிரையன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கதிர் வீச்சுக் குண்டுகள் தயாரிக்கும் பணியில் பாகிஸ்தான் ஈடுபட்டிருப்பதுடன் மேற்கூறிய நாடுகளின் அணுவாயுத உற்பத்தித் தளமாகவும் பாகிஸ்தானே விளங்குகிறது.

கதிர்வீச்சுக் குண்டுகளால் தொடர்ச்சியான அபாயங்கள் உண்டாகும். தீவிரவாதிகள் இந்த வகைக் குண்டுகளை எந்த நாட்டுக்கு எதிராகவும் பயன்படுத்தும் அபாயம் உருவாகலாம்.

பாகிஸ்தானுக்கு 10 பெட்டிகளில் கடத்தப்படவிருந்த கோபால்ட், சீசியம் போன்ற கதிர் வீச்சுக் குண்டுகளைத் தயாரிக்கும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் இந்தியாவுக்கு எதிரான உணர்வலைகள் வலுவடைந்துள்ளதால் இந்தியா மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும் எனவும் ஸ்ரீபன் டி பிரையன் எச்சரித்துள்ளார். (உ)

தென் லெபனானில் இருந்து

இஸ். படை வாபஸ்; அவ்விடங்களில் ஐ.நா. படை நிலைகொள்ள வேண்டும்

இஸ்ரேல் விருப்பம்

(லெபனான்)

கடந்த 22 வருடங்களாக தென்லெபனான் பகுதியில் நிலை கொண்டிருந்த இஸ்ரேலியப் படைகள் தமது பாதுகாப்பு நிலைகளை அகற்றி வருகின்றன.

இஸ்ரேலியப் படையினர் அப்பகுதியில் அமைந்திருந்த தமது தொலைத்தொடர்புக் கோபுரத்தையும் ஆயுத தளபாடங்கள் என்பவற்றையும் அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை ஜூலை 7 ஆம் திகதிக்குள் முடிவு பெற்று விடுமென இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக் உறுதியளித்துள்ளார்.

இஸ்ரேல்சிறியபேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாகயிருந்த இப்படைவிலகல் விவகாரம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இருநாட்டு சமரசப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படும் சாத்தியங்கள் அதிகரித்திருப்பதாக அரசியல் அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம்,

தாம் நிலைகொண்டிருந்த இடங்களில் ஐ.நா. படையினரை நிறுத்த வேண்டும் என இஸ்ரேல் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-சி)

சிம்பாப்பே நெருக்கடிகள் தொடர்பாக அமைச்சரவை கூடி ஆராய்வு

(ஹராரே)

சிம்பாபே நாட்டு ஜனாதிபதி றொபேட் முகாபேயின் அமைச்சரவை நாட்டில் தலைவிரித்தாடும் வன்முறைகள்தொடர்பாகவும் பொதுத்தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பது தொடர்பாகவும் கடந்த செவ்வாயன்று கூடி ஆராய்ந்தது.

சிம்பாபேயின்நிலச்சீர்திருத்தத்திட்டம் தொடர்பாக கடந்த வாரம் லண்டனில் மேற்கொண்ட பேச்சு வார்த்தையின் அறிக்கைகளும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத்தெரியவருகிறது.

பொதுத்தேர்தல் நடத்துவதற்கானகால எல்லைபற்றி விவாதிக்கப்பட்ட போதும் அது பற்றிய தீர்க்கமான முடிவெதுவும்எடுக்கப்பட்டதாகத் தெரிய வரவில்லை.

எனினும் நிலச்சீர்திருத்த விவகாரத்தை எவ்வாறு கையாள வேண்டும் என சிம்பாப்பே அரசு ஏற்கனவே கொண்டுள்ள நிலைப்பாட்டில் மாற்றமேதும் ஏற்படுத்தப்படமாட்டாதென தகவல் விவகார அமைச்சர் தெரிதுள்ளார். (உ)

வைர வியாபாரி கொலையுடன் அஸாருதீனுக்கு தொடர்புண்டா?

மும்பைப் பொலிஸார் சந்தேகம்

(புதுடில்லி)

கிரிக்கெட் ஊழல்சம்பந்தமான விசாரணைகளை நடத்திவரும் மும்பைப் பொலிஸாரின் சந்தேகப்பார்வை தற்போது, கொலைச்சம்பவம் ஒன்றுக்காக இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் அஸாருதீன்மீது வீழ்ந்துள்ளது.

மும்பையின் புறநகர்ப்பகுதியில் வசித்துவந்த பிரபல வைரவியாபாரி ஒருவர் கடந்தவாரம் அவரது வீட்டின் முன் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இவரைக் கொலைசெய்ததாகக் கருதப்படும் குழுவுக்கும் சர்ச்சைக்குரிய முன்னாள் தென்னாபிரிக்க கிரிகெட் அணித்தலைவர் கான்சி குரொஞ்சேவிற்கும் இடையே நெருங்கியதொடர்புகள்இருப்பதாகக்கருதப்படுகிறது.

மேற்படிவர்த்தகர் சுட்டுக் கொல்லப்படுவதற்கு இரண்டு தினங்கள் முன் குரொஞ்சேயுடன் அஸாருதீன் காணப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் வர்த்தகருடைய கொலைக்கும் அஸாருதீனுக்கும் தொடர்புகள் இருக்கலாம்எனும் சந்தேகம் மும்பைப்பொலிஸார் மத்தியில் எழுந்துள்ளது.

இதுதொடர்பான அஸாருதீனுடனான முதற்கட்ட விசாரணைகளை தொலைபேசிமூலம் நடத்தியிருப்பதாகவும், விசாரணைகள் இன்னும் தொடரும்எனவும் மும்பைப்பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம்,

மிகவும் விரிவானமுறையில் நுணுக்கமான விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஆட்டநிர்ணய சதிக்கும், இக்கொலைக்கும் தொடர்பு இருப்பதாக நம்புவதாகவும் மும்பைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

ஒரே நேரத்தில் எதிரெதிரே வந்த ரயில்கள் மோதல் 4 பேர் பலி

-ஜகார்த்தாவில் சம்பவம்

[ஜகார்த்தா]

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவின் தென்மேற்குப் பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 4பேர் கொல்லப்பட்டனர் 33 பேர் படுகாயமடைந்தனர்.

ஒரு தண்டவாளத்தில் ஒரே நேரத்தில் இரு ரயில்கள் எதிரெதிரே வந்தபோதே மேற்படி மோதல் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

ரயில் வண்டிகள் எப்போது புறப்படும் என்பது குறித்த சரியான தகவல்கள் வழங்கப்படாமையே இவ் விபத்துக்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

இந்திய ராஜதந்திரம் தோல்வியுற்ற உண்மையை மறக்கக்கூடாது

தமிழ்த் தேசியக்கட்சி எச்சரிக்கை

(சென்னை)

''விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்காக இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கையைஇந்திய ஏற்கக்கூடாதென தமிழ்த்தேசப்பொதுவுடமைக்கட்சி இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தஞ்சாவூரில் இக்கட்சி இது தொடர்பாக அறிக்கை ஒன்றினை வெளியிட்டது.

ஒடுக்குமுறை

பேரினவாத ஒடுக்குமுறைக்கு ஆளாகியுள்ள இலங்கைத்தமிழர்கள் உரிமை கோரிப்போராடுகின்றனர். இத்தருணத்தில் பௌத்தபிக்குகளும் இந்தியப்படை இலங்கை வரவேண்டுமெனக்கோரியுள்ளனர். தமிழ், சிங்களமக்களால் எதிர்க்கப்பட்டு விபரீத விளைவுகள் ஏற்பட்டதும். இந்தியராஜதந்திரம் தோல்வி கண்டதும் கசப்பான உண்மைகள்.

இத்தவறை இந்திய அரசு மீண்டும் செய்யக்கூடாது என்றும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ராமதாஸ்

இதேவேளை தமிழகப்பாட்டாளிமக்கள் கட்சி ஸ்தாபகர் டாக்டர் ராமதாஸ் இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பி ஏற்கனவே செய்த தவறை இந்தியா மீண்டும் செய்யக்கூடாதெனத் தெரிவித்துள்ளார்.

கலைஞர் விரைவு

இதற்கிடையில் தமிழக முதல்வர்கலைஞர்மு.கருணாநிதிபிரதமர் வாஜ்பாயின் அவசர அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் விசேட விமானத்தில் சென்னையிலிருந்து புதுடில்லி விரைந்துள்ளார்.

இலங்கைக்குஇந்தியப்படைகளை அனுப்பக்கூடாதென்ற கருத்து தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் மத்தியில் வலுப்பெற்று வருவதாக சென்னைத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

ஜகார்த்தாவில் தொடரும் ஊரடங்கு

[ஜகார்த்தா]

ஜகார்த்தாவின் அம்பொன் நகரில் மீண்டும் வன்செயல்கள் வெடித்ததையடுத்து காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நேரத்தின் பின் வீதிகளில் நடமாடுவோரை கண்ட இடத்தில் சுடும் உத்தரவு இந்தோனேசிய அரசினால் இராணுவத்தினர்க்கு வழங்கப்பட்டுள்ளது. (உ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பொதுஅறிவுவினாக்கள்

இல. 12

(தொகுப்பு:- யூட்)

பின்வரும் நடுகளின் தலைநகரங்கள் எவை?

01) சைப்ரஸ் ________
02) சிலி ________
03) ஆப்கானிஸ்தான் ________
04) கானா ________
05) கிரேக்கம் ________

பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?

06) அவுஸ்திரேலியா ________
07) மாலைதீவு ________
08) பிறேசில் ________
09) தாய்லாந்து ________
10) கயானா ________
11) மிகப்பெரிய சூரிய புள்ளியைக் கண்டுபிடித்த ஆண்டு எது?
12) மிக குளிர்ச்சியான சோள் எது?
13) சந்திரனிலிருந்து முதன் முதலாக விண் கற்கள் கொண்டு வந்த வாகனம் எது?
14) இந்திய விண்வெளி ஆராய்ச்சி தொடங்கிய ஆண்டு எது?
15) அமெரிக்கா அனுப்பிய முதல் துணைக்கோள் எது?
16) சான் பிரான்சிஸ்கோ துறைமுகம் அமைந்துள்ள நாடு எது?
17) மியான்மர் நாட்டுப் பாராளுமன்றத்தை எவ்வாறு அழைப்பர்?
18) ஈரப்பதனை அளப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவி யாது?
19) உலகின் மிகப்பெரிய துணைத்தீவு எது?
20) சாற்றில் அதிகமாகக் காணப்படும் வாயு எது?
21) ஒட்சிசன் இல்லாத அமிலம் எது?
22) சல்பரினுடைய மிகத் திடமான உருவம் யாது?
23) சீனியிலுள்ள வாயுக்கள் எவை?
24) டைனமைட்டின் விஞ்ஞானப் பெயர் யாது?
25) எம்பியர் ஸ்டேட் கட்டடம் காணப்படும் நாடு எது?
26) டிரான்சிஸ்டரைக் கண்டு பிடித்தவர்கள் யார்?
27) D. N. A. யின் பரிபூரண உருவம் எது?
28) ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சியின் தலைமை நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?
29) ஐரோப்பிய அணுசக்திக் குழு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
30) ஜோர்தான் நாட்டின் தற்போதைய மன்னரின் பெயர் என்ன?
31) பெண்கள் முதலில் எத்தனையாம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றினர்?
32) ஒரு செஸ்போர்டில் எத்தனை கூடுகள் உள்ளன?
33) ஆயிரம் பொய்கைகளின் நாடு என அழைக்கப்படும் நாடு எது?
34) இந்தியாவின் மொத்த மாகாணங்களின் எண்ணிக்கை யாது?
35) கழுகை அடையாளமாகக் கொண்ட நாடு எது?
36) தேம்ஸ் நதியோரத்தை அண்டிக் காணப்படும் நாடு எது?
37) கோப்பியை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு எது?
38) பிலிப்பைன்ஸ் தீவுகள் எத்தனையாம் ஆண்டு சுதந்திரம் பெற்றன?
39) பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்து தனிநாடானது எத்தனையாம் ஆண்டு?
40) எப்சம் உப்பு என்றால் என்ன?

குறிப்பு:-

இதற்கான விடைகளை 11-05-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

அறிவியல் பகுதி வினா இல. 12

"வலம்புரி"
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

முழுப்பெயர்:- ....
சொந்த முகவரி:- ....
கையொப்பம்:- ....

இப்படிவத்தைப் பூரணப்படுத்தி உங்கள் விடையுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

சீமெந்து ஊழியர்களுக்கு இடர்கால கொடுப்பனவு வழங்கக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் அலுவலகத்தைச் சேர்ந்த சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தங்களுக்கு இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் கே.வி.குகேந்திரன் ஊடாக(ஜெகன்) மேற்படி அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தாவிற்குகோரிக்கைகள் அடங்கிய மகஜரை அனுப்பிவைத்துள்ளார்.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நடைபெறும் யுத்த அனர்த்தங்களால் கடந்த ஒன்பது ஆண்டுகளாக மூடிக்கிடக்கும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் 125ஊழியர்கள் 1996 தொடக்கம் சீமெந்து விற்பனையிலும் தாள்கள் ஆக்குவதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த செயற்பாடுகள்குடிசார் நிர்வாகத்தை உள்ளடக்கியதே.

இலங்கை மின்சாரசபை, கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம்,தேசிய வியாபாரக் கூட்டுத்தாபனம், வடபிராந்திய போக்குவரத்துச் சபை, போன்ற வற்றில் தொழில் புரிவோருக்கு இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 1996 ஆம் ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் வரையும் 1997 ஆம் ஆண்டு தை மாதம்முதல் 1998 டிசம்பர் மாதம் வரையானகாலப்பகுதிகளில் எமதுவிபரப்பட்டியலில் கணிப்பிடப்பட்டு தலைமைப் பணியகத்தின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எளிய எமது கோரிக்கைகள் சம்பந்தமாக தங்கள் மேலான கவனத்தைச் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது கோரிக்கைகள் தங்களால் உரிய கவனமெடுக்கப்பட்டு உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுமாயின் மிகுந்த நன்றியுடையவராக இருப்போம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

யுத்தஅனர்த்தத்தால் இடம்பெயர்ந்த 298 குடும்பங்கள் வலி.கிழக்கில் தஞ்சம்

(அச்சுவேலி)

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து யுத்தநடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தபோதும் 158 குடும்பங்கள் வலிகிழக்குப் பிரதேச செயலர் பணிமனையில் தம்மைப் பதிவுசெய்து கொண்ட பின்னர் இப்பகுதியிலுள்ள உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டில் தங்கியிருப்பதாக வலிகிழக்குப்பிரதேச செயலக அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து கடந்த வார முற்பகுதிவரை சுமார் 140 இடம்பெயர்ந்த குடும்பங்களே இப்பகுதியில் வசித்துவந்தனர். ஆனால் மீண்டும் போர்நடவடிக்கைகள் உக்கிரமடைந்து வருவதைத் தொடர்ந்து மேலும் 158 குடும்பங்கள் இப்பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளன. ஆக மொத்தம்இதுவரை 298குடும்பங்கள் வலிகிழக்குப்பிரதேச செயலகத்தில் தம்மைப் பதிவு செய்துள்ளன.

இவ்வாறு இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் மக்களுக்கு நிவாரண உதவிப்பணிகளை மேற்கொள்வதற்கு துரித கதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் ஏனைய உதவி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(சு-14)

சுன்னாகம் ப.நோ. கூ. சங்கத்தின் கந்தரோடைக் கிளையில் திருட்டு

(சுன்னாகம்)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கந்தரோடை சுப்பிரமணியம் வீதியிலுள்ள கிளை 3இல் திருட்டுச் சம்பவம் கடந்த செவ்வாய் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருட்டுக் கோஷ்டி அங்கிருந்த பால்மாவகை,சீனி மா,அரிசி, சோடா போன்ற சுமார் 15000 ரூபா பெறுமதியான பொருட்களை திருடிக் கொண்டு பின் கதவை உடைத்து வெளியேறியுள்ளனர்.

வழமையாக அங்கு கடமையாற்றும் காவலாளி அன்று கடமைக்குச் செல்லவில்லை என பொலிஸாரின் விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

(கி)

பொது அறிவு வினா இல. 11

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) சீ. சுஜீகரன், கொடிகாமம்
02) கி. குமாரவடிவேல், சாவகச்சேரி
03) செ. வசந்தகுமாரி, நல்லூர்
04) தே. தர்சினி, கொடிகாமம்
05) செ. யூட்ஸ்நிசாந்தன், மிருசுவில்
06) சு. சுந்தரலிங்கம், கொடிகாமம்
07) ப. தர்சினி, சாவகச்சேரி
08) க. அர்ஜீன், 1-ம் ஒழுங்கை பிறவுண் வீதி
09). சி. திவாகரன், மட்டுவில்
10) ந. கோசலா, ஓட்டுமடம்
11) வே. தேவஞானேஸ்வரன், மிருசுவில்
12) ர. மயூகரன், மயிலிட்டி
13). சு. கர்ணன், எழுதுமட்டுவாள்

பொது அறிவு வினா இல. 11 இற்கான விடைகள்

1] ஏதென்ஸ்
2] வாஷிங்டன்
3] அங்காரா
4] டோக்கியோ
5] ஒட்டாவா
6] றியால்
7] பிராங்
8] நேபாள றுப்பீஸ்
9] கயாத்
10] நகுல்ட்ரம்
11] ஈராக்
12] போலந்து
13] சவூதி அரேபியா
14] ஐக்கிய அமெரிக்கா
15] இத்தாலி
16] விளாடிமிர் புட்டின்
17] கோபி அனான்
18] போல் எட்வேட்
19] சவூதி அரேபியா
20] போல் கெட்டிங்
21] இத்தாலி
22] வத்திக்கான்-27m
23] காட்லீப் டெய்ம்யெர் ஜேர்மன்
24] சீனா
25] ஜப்பான்
26] லீக்லூ
27] ஒஸ்திரியாவில்-1860
28] மேடம்டபிளே-சுவீடன்
29] ரைட்டிஜன் ஒட்சைட்
30] லூயிஸ் பிரெய்லி
31] முதலை
32] நாய்
33] ஷாகெகியோகிசுமி-ஜப்பான்7-98 வயது வரை
34] போய்ஹரிஸ்-அமெரிக்கா 1905 இல்
35] ஸ்கொட்லாந்தில்
36] எட்மண்ட் ஹிலரியும் டென்சிங் நோகோயும்
37] இந்தோனேசியா
38] நோர்வே நாட்டுமக்கள்
39] அவுஸ்திரேலியா
40] 1905-இல்

பல்கலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் தமிழில் வெளிவந்த மாற்று சினிமாப் பட வரிசையில் இரண்டவதாக மகேந்திரனின் 'மெட்டி' எனும் திரைப்படம் வீடியோக் காட்சியாக எதிர்வரும் சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு புவியியற்துறை அறை இல. 03 இல் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள் எவரும் வந்து பயன் பெறலாமென இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(சி)

சுழியில் சிக்கி மரணம்

[திருகோணமலை]

திருகோணமலை நகரில் டைக் வீதி ஓரக் கடலில் குளிக்கச் சென்ற 14 வயது முஸ்லிம் சிறுவன் நீர்ச்சுழியில் சிக்கிமரணமடைந்தார்

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இடம் பெற்றது.

சம்பவம் இடம் பெற்ற கடல் பகுதியில் ஏற்கனவே மூன்று இளைஞர்கள் நீர்ச் சுழியில் சிக்கி மரணமானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(-சி)

ஐ.சி.ஆர்.சி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றது.

மோசஸ் நவரத்தினம் புனித அந்தோனியார் வீதி தும்பளை பருத்தித்துறை.

சூரியம் சந்திரலீலாமே/பா. சோமசுந்தரம் கணேஷ் வி.மு. வீதி பருத்தித்துறை.

சோதியமூர்த்தி மீசாலை வடக்கு மீசாலை.

(சி)

புலிகளை ராணுவம் முறியடிக்குமென நினைத்தோம் முடியாது போயிற்று

இந்திய உதவி குறித்து தேரர்கள் விளக்கம்

(கொழும்பு)

"1971 ஆம் ஆண்டில் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்ட போது அன்றைய பிரதமர் கிளர்ச்சியை அடக்குவதற்கு வெளிநாடுகளின் உதவியை நாடினார். அவரது கோரிக்கைக்கு 24 மணி நேரத்துக்குள் உதவிகள் கிட்டின. அது போன்று நாட்டின் இறைமையையும், ஐக்கியத்தையும் பாதுகாக்க அரசு உடனடியாகஇந்தியாவின் உதவியைக் கோரவேண்டும்.

இவ்வாறுநாரஹென்பிட்டி அபயராம விகாரையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மாதுனுவாவே சோபிததேரோ, மொரதட்டுவே ஆனந்த தேரோ ஆகியோர் கூறினர்.

யுத்த கவுன்சில்

அவர்கள் அங்கு மேலும் தெரிவித்ததாவது. "ஒய்வுபெற்ற முப்படைத் தளபதிகள், போர் நிபுணர்களைக் கொண்ட யுத்தக் கவுன்சில் ஒன்று நியமிக்கப்பட வேண்டும். இராணுவ நடவடிக்கைகளில் அரசியல் வாதிகள் தலையிடக்கூடாது.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினர் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர், ஆகவே நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் பாதுகாக்க இந்தியா உதவவேண்டும் என இந்தியத் தூதுவரிடம் கேட்டுக் கொண்டுள்ளோம்.

இதுபற்றி இந்திய அரசுக்கு விபரிப்பதற்கென புதுடில்லி சென்றுள்ள அவர் நாடு திரும்பியதும் மீண்டும் அவரைச் சந்திப்போம்.

மூத்த சகோதரன்

இலங்கைக்கு அயல் நாடான இந்தியா மூத்த சகோதரனைப் போன்றது. ஆகையால் இந்தியாவைவிட்டு அரசு நோர்வேயின் உதவியை நாடக்கூடாது."

அன்றும் இன்றும்

1989 ஆம் ஆண்டில் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப் படை நாட்டை விட்டுவெளியேற வேண்டும் என்று நீங்கள் கோஷம் எழுப்பினீர்கள் இப்போது இந்திய உதவி வேண்டுமென்கிறீர்களே எனக் கேட்டபோது 'இலங்கை இராணுவம் புலிகள் இயக்கத்தை முறியடிக்கும் என நினைத்தோம். முடியவில்லை ஆகையால் இந்தியாவின் உதவியைக் கேட்டுக்கொண்டுள்ளோம். எந்நேரமும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கவேண்டுமென அர்த்தமில்லையே என ஆனந்ததேரோ பதிலளித்தார்.

இராணுவத் தளபாடங்கள் மூலம் இந்தியா உதவி செய்யலாம் உடன்படிக்கை மூலம் இந்திய இராணுவம் வருவதை நாம் விரும்பவில்லை எனவும் கூறினார். (சி)

பொது சிற்றூழியர் சங்கத்தின் பிரதி நிதிகள் குழு வெளிநடப்பு

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கப் பொது சிற்றூழியர் சங்கம் மாகாண பிரதம செயலாளருடனுமான பேச்சு வார்த்தையில்இருந்து கடந்த வெள்ளிக்கிழமையன்று வெளிநடப்புச் செய்தது.

பிரதிநிதிகள் குழு மண்டபத்துக்குள் நுழைய முயன்றபோதுஇருவர்மாத்திரம் அனுமதிக்கப்படுவர் தலைவர், செயலாளர் மேசைக்கு வரலாம் என பிரதம செயலாளரால் கூறப்பட்டதாம்.

அதனைக்கண்டித்து செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளாத எந்தப் பேச்சு வார்த்தையிலும்தாம் கலந்து கொள்ளப் போவதில்லை எனக் கூறி பிரதிநிதிகள் குழு வெளி நடப்புச் செய்தது (சி)

சாவகச்சேரியில் துப்பாக்கிச் சூடு இளைஞர் காலில் காயம்

சாவகச்சேரிப்பகுதியில்நேற்றுக் காலை10 மணிக்கு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காலில் காயமடைந்துள்ளார். மடத்தடி சாவகச்சேரியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவகரன் வயது 20 என்பவரே காயத்துக்குள்ளானார்.

நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த வேளையில் இத் துப்பாக்கிச்சூடு இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (க-12)

வடமராட்சி வலய கல்விப் பகுதியில் மூவருக்கு மீண்டும் நிர்வாகப்பதவிகள்

(புலோலி)

கல்விச் சேவை ஆணைக் குழுவினால் வடமராட்சி வலயக் கல்விக் திணைக்களப் பகுதியில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்ட 4 ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களில் மூவருக்கு மீண்டும் ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவைப் பதவிகள் வழங்கப் பட்டுள்ளன. இதுசம்பந்தமாக கடிதம் வலயக்கல்வித் திணைக்களத்திற்கு கல்விச் சேவை ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றது.

திரு.எம், ஸ்ரீபதி, திரு. எஸ். புஸ்பலிங்கம், திரு.எஸ். நந்தகுமார் ஆகிய மூவருக்குமே மீண்டும் ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை பதவிகள் வழங்கப்பட்டுள்ளன திருமதி அருண்குமார் என்பவருக்கு இது வரை கடிதம் அனுப்பப்படவில்லை (க-52)

நோயினால் ம்னநிலை பாதிப்பு

'சுருக்கிட்ட நிலையில் வாலிபரின் சடலம் மீட்பு; புத்தூரில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

புத்தூர் பகுதியில் வாலிபர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். எனக் கூறப்படுகிறது.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த நீலகண்டன் சிறிதரன்[வயது 21] என்பவரே இவ்வாறு இறந்தவராவார். இவரின் மரணம் பற்றி தந்தை நீலகண்டன் கூறுகையில் 1997ம் ஆண்டு முதல் அடிக்கடி காய்ச்சலால் இவர் பீடிக்கப்பட்டிருந்தார். இதனால் இவரின் மனநிலையும் பாதிக்கப்பட்டிருந்தது. சம்பவம் நிகழ்ந்த தினம் நாம் கொண்டாட்டம் ஒன்றுக்காக வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்பிய வேளையில் மகன் வீட்டுக்குள் கழுத்தில் தூக்குப் போட்டு இறந்து கிடந்தார். என்றார்.

இது பற்றிய விசாரணை நடைபெறுகிறது. (சி-12)

இன்று இரு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

காரைநகர்-வாரி வளவு நல்லியக்க சபையின் ஆதரவில் க.பொ.த. (சா/த)பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற காரைநகர் பாடசாலை மாணவர்களைப் பாராட்டலும் அமரர் ஸ்ரீமான் செல்லப்பா கனகசபை ஞாபகார்த்தப்பரிசளிப்பும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்குகலாநிதி ஆ. தியாகராஜ மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் மி.சு. வேலாயுதபிள்ளை தலைமைவகிப்பார்.

யாழ். யாழ்ற்ரன் கல்லூரியில் முற்பகல் .1 மணிக்கு நடைபெறும் நிகழ்வுக்கு ந. பரமசிலம் தலைமைதாங்குவார். (சி)

பிறப்பு அலுவலகம் இடமாற்றம்

(வடமராட்சி-கிழக்கு)

வடமராட்சி-கிழக்கு செம்பியன்பற்றில் இயங்கி வந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு அலுவலகம் தற்போது யுத்த சூழ் நிலை காரணமாக அம்பனில் இயங்குவதாக செம்பியன்பற்று பிரிவு பிறப்பு இறப்பு, விவாகப் பதிவாளர் தெரிவித்தார். (க-43)

கல்வியியல் கண்காட்சி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரியமாணவர்களின் கல்விக் கண்காட்சி இன்றும், நாளையும் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை குறிப்பிட்ட இரு தினமும் கண்காட்சியினை மக்கள் பார்வையிடலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

கண்காட்சியில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு. தி. கமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-39)

கெல்ற் வகுப்புகள்

(செம்பியன்பற்று)

வடமராட்சியில் பல்கலைக் கழக புதுமுக மாணவர்களிற்காண 'செல்ற்' வகுப்புக்கள் கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யா/வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளது. (க-42)

வலிகாமம் 'கெல்ற்' நிலையத்தில்

புஜபல பராக்கிரமம் காட்டி பகிடிவதை அலங்கோலம்?

(உடுவில்)

வலிகாமத்தில் இயங்கும் கெல்ற் வகுப்புக்களிற்கு வரும் சிரேஷ்ட மாணவர்கள் சிலர் தம்முடன் பல்கலைக்கழகம் சாராத சில நண்பர்களையும் கூட்டி வந்து பகிடிவதை புரிவதாகக் கூறப்படுகிறது.

இம்மாணவர்கள் சில மாணவர்கள் மீது தமது புஜபலபராக்கிரமத்தைக் காட்ட முற்படுவதுடன் மாணவிகளையும் தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் அறிய வருகிறது

மேற்படி பகிடிவதை பாதுகாப்புப் படையினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் அளவுக்கு வந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. (ப-சி-15)

விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொல்பொருளியல் திணைக்களம் தச்சுவேலையாளர், மேசன் வகுப்பு 2 ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது. [உ]

நெருக்கடி நீங்க அரசியல்ரீதியான நடவடிக்கைகளே அவசியமானவை

ரணில் வலியுறுத்துகிறார்

(கண்டி)

"ஒவ்வொரு நாளும் மக்கள் அடுத்த நிமிடத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். போர் முனையில் இந்த நாட்டின் இளைஞர்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. வாழ்க்கைச் செலவு வானத்தை எட்டியுள்ளது." என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நுவரெலியாவில் நடைபெற்ற ஐ.தே.க. கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"நாடு எதிர்கொண்டுள்ள பேராபத்திலிருந்து நாட்டை மீட்கவேண்டுமானால் போர் உபாயங்களை விட அரசியல் ரீதியிலான உபாயங்களே கையாளப்பட வேண்டும்.

ஆயிரத்துக்கும் அதிகமான படையினர்களையும் பெருமளவு ஆயுதங்களையும் இழந்து, ஆனையிறவு முகாமையும் பறிகொடுத்துள்ளோம்.

அரசியல் மயப்படுத்தப்பட்ட யுத்தம் காரணமாக நாடு எதிர் கொண்டுவரும் இழப்புக்கள் எண்ணிப்பார்க்க முடியாதவையாக உள்ளன" என்றும் அவர் சொன்னார். (சி)

யாழ்.பல்கலையில் விரைவில் புதிய கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புகள் அலகில் நடத்தப்பட்டுவரும் கற்கை நெறிகளில் அலுவலக முகாமைத்துவம், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்கை நெறி, தொடர்பாடலும் ஆங்கிலமும் ஆகிய பாட நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது

இவற்றில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்கைநெறி எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-3)

9 வயது சிறுமியின் தோழில் 13அடி நீள மலைப்பாம்பு

(கொழும்பு)

காலை முதல் மாலை வரை ஓய்வின்றி மலைப் பாம்பின் அரவணைப்பில் வித்தைகள் காட்டும் ஒன்பது வயது சிறுமி ஒருத்தி பற்றிய தகவல் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரத்திலிருந்து மிகிந்தலைக்குச் செல்லும் வழியில் சுமார் $13\frac{1}{2}$ அடி நீளமுள்ள மலைப்பாம்பைத் தன் உடலில் சுமந்தவண்ணம் இவள் காட்டும் சாகஸங்களை உள்நாட்டவர்கள் உட்படபல வெளிநாட்டவர்களும் பார்த்து மகிழ்கின்றனர். தனதும் தனது தந்தையினதும் வயிற்றுப் பசியைப் போக்கவே இச்சிறுமி இத்தொழிலில் ஈடுபட்டுள்ளார் என்றும் இப்பாம்பிற்கு நாளொன்றுக்கு 5 கிலோ இறைச்சி கொடுக்க வேண்டுமெனவும் இப்பாம்பைத் தான்ஒரு உற்ற நண்பன் என்ற வகையில் நோக்குவதாக இச்சிறுமி கூறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

இடமாற்றம்

(கோப்பாய்)

வலி. கிழக்கு பிரதேச சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றிய பிரம்மஸ்ரீ சுந்தராஜேஸ்வர சர்மா இம்மாதம் தொடக்கம் வேலணை பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக இவர் வலி. கிழக்கு பிரதேசசபையில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-79)

யுத்தஅனர்த்தத்தால் இடம்பெயர்ந்து

வலி. கிழக்கில் தங்கியுள்ளவர்களுக்கு 2ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கை

(அச்சுவேலி)

யுத்தஅனர்த்தங்களால் இடம்பெயர்ந்துவலி.கிழக்குப் பகுதியில் தற்காலிகமாக வசித்து வருபவர்களுக்கு குடியமர்வு உதவுத்தொகையாக 1000ரூபாவும் தற்காலிக இருப்பிடம் அமைப்பதற்கான முதற்கட்டநடவடிக்கைக்காக 1000ரூபாவும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக வலி.கிழக்குப்பிரதேச செயலக வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக இடம்பெயர்ந்து வசித்து வரும் மக்களிடமிருந்து பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மேலதிக பதிவுகள் யாழ்.செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான உரியபதில் செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டதும் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய உதவி நடவடிக்கைப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும் வலி.கிழக்கு பிரதேச வட்டாரத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (க-14)

யாழ்ப்பாணம்

செடுப்பதூஉங்
கெட்டார்க்குச் சார்வாய்
மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம்
மழை
-குறள்

வலம்புரி

எண்ணிய முடிதல் வேண்டும்

தமிழர்தம் சமுதாயப் பண்பாட்டு மறுமலர்ச்சி காண, அறிவு பெருக கல்வி இன்றியமையாததே. இச் செல்வம் காலத்தால் நிலைத்து நின்று தொட்டனைத் தூறும் மணற் கேணிபோல் ஊற்றெடுக்க வல்லது. இச் செல்வத்தின் ஆணி வேராக, அகல் விளக்காக நிற்பவர்கள் ஆசிரியர்கள். அந்த ஆசிரிய குழாம் அமுத சுரபிகளாக, அறிவின் நிலைக்களனாக வாண்மையில் விருத்தியடைய வேண்டும்.

இன்றைக்கு பதினாறு வருடங்களுக்கு முன் முளை கொள்ள எத்தனித்த தேசியக் கல்வியற் கல்லூரி பல்வேறு தடைகளைத் தாண்டி இன்று உருப் பெற்றிருக்கிறது. இதனை இதனால் இவன் செய்வன் என்று என்ற பெருநாவலன கூற்றுக்கமைய தக்கதொரு பீடாதிபதித் தெரிவு நடந்தேறியிருக்கிறது.

எங்களுக்கு வேண்டியது மன் வளம் பெற வேண்டுமென்பது கல்வியியற் கல்லூரியின் வரவு தக்க ஆசான்களை மாணவச் செல்வங்களுக்கு வழி நடத்த உதவப் போகின்றது. அன்றியும் இடிக்குந் துணை கொண்டு செவிகைப்பச் சொற் பொறுக்கும் பெற்றியும் பண்பும் பீடாதிபதிக்கு இருப்பது மேலும் வலுவூட்டு மென்பதில் ஐயமில்லை.

கோடிக் கணக்கில் பணம் செலவிட்டு ஆக்கப்படும் இது போன்ற கல்வி நிறுவனங்கள் இலங்கையில் வேறு பாகங்களில் அறிவுப் பசியை அகற்றுகின்றன. ஆசிரிய வாண்மையை பெருக்குகின்றன. ஆக்கபூர்வமான - உணாவுப் பெருக்காய் உடையவர்கள் மட்டும் அதிகாரக் கதிரைகளை அலங்கரிக்க வேண்டும் - தீர்மானப் காலத்திற் கேற்ப எடுக்கத் தெரியாதவன் நிர்வாகி ஆகமாட்டார் அந்தக் குறைபாடு புதிய கல்லூரித் தலைமைத் தெரிவில் இல்லை என்று அடித்துக் கூறலாம்.

வள்ளன்மைச்செங்கரங்களின் அணைப் போடு கால்கோள் செய்யப்பட்ட ஆரம்ப விழா போற்றுதற் குரியது. பொருள் மலிந்தது புன்முறுவலோடு தம் குருத்தொழிலை அர்த்தமுள்ளதாக்க முனைந்து நின்ற ஆசிரிய மாணவ மாணவிகள் பாக்கிய சாலிகள். தக்க மீகாமனோடு பயணத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். பயணம் சுகமாக நிறைவுறும்.

சாஸ்திரங்களில் விதந்து கூறப்படும் 'செப்பு'

தெய்வீக அலையை கவரும்சக்தியும் அதற்குண்டு

பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜ சர்மா

சாஸ்திரத்தில் பூரணவிஞ்ஞானம் இருக்கின்றது. அதனால் அது முழுக்க விஞ்ஞானத்திற்கு உடன்பாடாகிவிட வேண்டும் என்று நினைக்கக் கூடாது. சாஸ்திரங்களில் கூறியவை எல்லாம் உண்மை என்ற நம்பிக்கை வேண்டும், எமது சிற்றறிவுக்கு எட்டிய விடயங்களில் உண்மை நிலை நிறுத்தப்படும்பொழுது விளங்காத மற்ற சாஸ்திர உண்மைகளும் பின் ஒரு காலத்தில் அதற்கான விஞ்ஞான உண்மைகளும் நிரூபிக்கப்படலாம்.

ஆனால் விஞ்ஞான ரீதியில் பரிகாரம் செய்து இரும்பை எவர்ஸில்வர் ஆக்கிவிட்டோம் எவர்ஸில்வர் ஆக்கிவுடன் இரும்பின் தோசம் போய் விட்டதா? இதைஎதற்குச் சொல்கிறோம் என்றால், இப்பொழுது எங்கு பார்த்தாலும் எவர்ஸில்வர் இது அதிக புழக்கத்தில் வந்துவிட்டது.

"இரும்பு கூடாது என்பதற்குக் காரணம் அது துருப் பிடிக்கக் கூடியது இதனை அனுமானம் செய்து கொண்டு இருப்பின் தோஷம் மாற்றியாகி விட்டது. எவர்ஸில்வரை சாஸ்திர சம்பந்தமான தாக்கப் பார்க்கிறார்கள். ஆனால் சாஸ்திரம் இரும்பு கூடாது என்பது துருவுக்காக மாத்திரம் அல்ல. அது பாவகரமானது அசுர சக்திகளையும், சனீஸ்வரன் மாதிரி உக்ர கிரகங்களின் சக்தியையும் நம்மிடம் இழுத்து வரும்என்பதால்தான் கூடாது என்று சாஸ்திரம் வைத்து இருக்கின்றது. எவர்ஸில்வரிலும் இந்தத் தோஷம் போய்விடா.

தெய்வீக சக்தியும் ஒருவிதமான வானொலி அலைமாதிரியானதே. தெய்வீக அலையைக் கவர்ந்து இழுக்கின்ற ஆற்றல் செம்புக்கே அதிகம் உண்டு உதாரணமாக மலிந்த எவர்ஸில்வரைக் கம்பியாக நீட்டி மின்சார, தொலைபேசி வயர்களாகப் பயன்படுத்தி இருக்கலாமே? ஏன் பயன்படுத்த முடியவில்லை. அது மின்சாரத்தை இலகுவில் கடத்த மாட்டாது. இதே மாதிரியே தெய்வீக ஆற்றலையும் பிரபஞ்சத்தில் இருந்து சுலபமாகப் பெற்றுக் கொள்ள மாட்டாது.

ஆனால் செம்பு சுலபமாகச் செழும்பு பிடித்துவிடும். இது ஓர் மிச் சிறந்த கடத்தியாகும் மின்சாரத்தை மட்டுமல்ல, தெய்வீக சக்தியையும் கவர்ந்து இழுக்கக் கூடியது. இதனாலேயே சைவக் கிரிகைகள், மற்றும் கோயில்களில் இவற்றைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். இதனால் முற்காலத்தவர்கள் தெய்வீக சக்தியைப் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து உள்ளார்கள்.

ஆனால் எமது சமய வைபவங்கள் எல்லாவற்றிலும் தற்பொழுது எவர்ஸில்வரே முதலிடம் பிடித்து வருகின்றது. இதனால் பல தீங்குகள் ஏற்பட்டு வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். எப்படி பணம் செலவு செய்து விழாக்களை நிகழ்த்தினாலும் அதன் பூரண பலனைப் பெற முடியவில்லை.

பல கோயில்களில் எவர்ஸில்வர் திருவாசிகளைப் பல லட்ச ரூபா செலவு செய்து மண்டப வாசல்களுக்குப் பொருத்துகின்றார்கள். அதனால் துர்சக்திகளை அழைக்கின்றார்கள். இதனால் குளிக்கச் சேறு பூசியது போன்ற நிலைமையே ஏற்படும். ஒரு கோயிலைப் பார்த்து மற்றக் கோயில்களும் பின்பற்றும் நிலையே யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. இது மிகுந்த வேதனைக்குரிய தொன்றாகும்.

நல்லூர் கந்தசுவாமி கோவில், நல்லூர் சிவன் கோயில் போன்ற பலகோயில்களில் இன்றும் செம்பினால் ஆன பொருட்களையே பயன்படுத்துகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் தூண்கள், சுவர்கள் போன்றவற்றிற்குக் கூட செம்பையே பயன்படுத்தியுள்ளார்கள், இதன் மூலம் பக்தர்களுக்கு அனுக்கிரக அலை கூடும். இதனாலேயே இங்கு பக்தர் கூட்டம் நிரம்பி வழிபாடு செய்பவரைக் கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது.

செம்பின் விலை சற்று அதிகமாக இருந்தாலும் கோயில் திருப்பணி சபைகள், ஆதீன கர்த்தாக்கள் செம்பின் சிறப்பை உபயகாரர்களுக்கு எடுத்துக் கூறிச் சிரமத்தைப் பாராது பயன்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். கோயில் கொடிமரம், கலசம் போன்றவை எக்காரணம் கொண்டும் சில்வரில் போடக் கூடாது. செப்பு, [illegible] தாசிய வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது. இதற்குச் செப்புக் குடத்தில் நீர் வைத்துப் பருகிவர வேண்டும்.

எனவே எமது சமய சாஸ்திரங்கள் எங்களுக்குக் கற்பிப்பவை எல்லாம் சுபீட்சமும், சுகவாழ்வும் பெற்று வாழ்வதற்கு ஏற்ற நெறிமுறைகளையே. சாஸ்திரங்களைக் கடைப்பிடித்து நீண்ட காலம் வாழ்வோமாக.

மாணவர்கள் இருவர் கைது

(கரணவாய்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி உயர்தர மாணவர்களான செல்வன்கள் சி. ஆனந்தநேசன், ம. ஜெகதீசன் ஆகிய இருவரும் கடந்த செவ்வாய்க் கிழமை உடுப்பிட்டியில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(சி-27)

செஞ்சிலுவைக் கப்பலில் 40 பேர் பயணம்

[யாழ்ப்பாணம்]

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் இடம் பெற்ற நோயாளர்களுக்கான கப்பல் சேவையில் நோயாளிகள் 14 பேரும் அவர்களுக்கு உதவியாக 10 பேரும் ஒரு தாதி உத்தியோகத்தர் உட்பட 40 பேர் திருமலை பயணமாகியுள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் 18 நோயாளர்கள் உட்பட 39 பேர் யாழ் அழைத்து வரப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(சு-3)

பட்டதாரி ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி ஆசிரியர் நலன் புரிச்சங்கத்தின் சிறப்புக்கலந்துரையாடல் கூட்டம்ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 1.00 மணிக்கு கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையில் சங்கத்தின் செயலாளர் வே. கெ. தனபாலன் ஆசிரியர் தலைமையில் இடம்பெறும்.

ஆசிரியர்சேவையில் பாதிப்புற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் தவறாது தமது ஆவணங்களுடன் பங்குபற்றுமாறு தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நெசவுப் பயிற்சி பாடசாலைகளுக்கு

நிரந்தர அதிபரும் ஆசிரியர்களும் அவசியம் நியமிக்கப்பட வேண்டும்

மாணவர்கள் ஒன்றியம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

'நெசவுப் பயிற்சிப் பாடசாலை மாணவர்களது கல்விச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் நெசவுப் பயிற்சிப் பாடசாலைக்கு மட்டுமல்ல இலங்கையில் உள்ள அனைத்து 'நெசவுப் பயிற்சிப் பாடசாலைக்கும் ஒவ்வொரு அதிபரும் 2 அல்லது 3 நிரந்தரப் போதனாசிரியர்களும் நியமிக்கப்பட வேண்டும்.'

யாழ்ப்பாணம் அரசினர் நெசவுப் பயிற்சிப் பாடசாலை மாணவிகளால் ஒன்றிணைந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பியுள்ள அவசர கோரிக்கைகள் அடங்கிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதியவர் வேண்டும்

தமது நிலை தொடர்பாக பயிற்சி மாணவிகள் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பொறுப்புணர்வின்றி பயிற்சி மாணவர்களது கல்வியில் சிறிதும் அக்கறையின்றி அடிக்கடி கொழும்பு சென்று தனது நலனில் மட்டுமே குறியாக இருக்கின்ற பயிற்சிப் பாடசாலையின் தற்போதைய பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்து, புதியவரும் எம்மை நல்வழியில் இட்டுச் செல்லக் கூடியவருமான ஒருவரை நியமிக்க வேண்டும்.

பின்னடைவு

நெசவுப் பயிற்சியை மேற்கொள்கின்ற இரு வெவ்வேறு ஆண்டு மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர் மட்டுமே கல்வி போதிப்பதனால் எமது கல்வியில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்திக்க உடனடியாக இரு போதனாசிரியர்களை நியமிக்க வேண்டும்.

2000 ஆம் ஆண்டு யூன் மாதம் நடக்க இருக்கின்ற முதலாம் வருட இறுதிப்பரீட்சையை பிற்போட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதையில் வந்த அதிகாரி

மதுபோதையில் வந்து எம் மீது தகாத வார்த்தைப் பிரயோகம் நிகழ்த்திய கொழும்பு புடவைக் கைத்தொழில் திணைக்கள அதிகாரிக்கு உரிய தண்டனை வழங்கி வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. (உ-சி)

அறிவு வளர்ச்சிக்கு எழுத்தறிவுமட்டும் போதுமென எண்ணுவது மடமையே

கிழக்கு துணைவேந்தர் இடித்துரைப்பு

(மட்டக்களப்பு)

'ஆசிரியர்கள் தமது அறிவு வளத்தைத் தொடர்ந்தும் மேம்படுத்த வேண்டும் கற்றலும் கற்பித்தலும் ஆசிரியர்களுக்குமிக மிக அவசியமாகும் கால மாற்றங்களுக்கு ஏற்ப அன்றாடம் கிட்டும் தகவல்களை கற்றறிந்து கற்பிக்க வேண்டும்;

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழகக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்காக நடத்தப் பட்ட சிறுவர் உரிமைகளும் ஆசிரியர்களின் பங்கும்' என்று செயலமர்வில் பேசுகையில் கிழக்குப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா கூறினார்.

இதன் மூலமே ஆசிரியர்கள் இளம் தலைமுறையினருக்குச் சிறந்த வழிகாட்டிகளாக அமைய முடியும்.

ஊமைகள் மத்தியில் கூளறு வாயன் பெரியவனாக இருக்கலாம் அல்லது எழுதத் தெரியாதோர் மத்தியில் எழுதத் தெரிந்தவன் அறிவாளியாக இருக்கலாம் ஆனால் இதனை வைத்துக் கொண்டு ஏனைய நாடுகளுடன் அறிவு மட்டத்தில் போட்டியிட முடியாது. அறிவு வளர்ச்சிக்கு எழுத்தறிவு மாத்திரம் போதாது 'என்றும் அவர் தமது உரையில் கூறினார்.

இன்று கலைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அதிகளவு இல்லாததால் பொறியியல் மருத்துவப் பட்டதாரிகளை அதிகளவில் உருவாக்க வேண்டுமென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது இதற்கும் பொருளாதார அடிப்படையில் மாத்திரம் சிந்திப்பதே காரணமாகும்' என்றும் தெரிவித்தார் துணைவேந்தர். (இ)

வ.கி.மா.ஆளுநர், ஈ.பி.டி.பி. சந்திப்பு

முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன

[கொழும்பு]

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனாவை ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கே.வி.கே.குகேந்திரன் (வி.கே. ஜெகன், எஸ்.தவராசா, ஆலோசகர் டாக்டர் விக்னேஸ்வரன் ஆகியோர் நேற்று கொழும்பில் சந்தித்து பல்வேற விடயங்கள் குறித்து பேச்சு நடத்தினர்.

அச் சந்திப்பின் போது பின்வரும் விடயங்கள் குறித்து முடிவெடுக்கப்பட்டது.

★ வ.கி.மாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களில் யாழ்ப்பாணம், கல்முனை தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு உடன் நேர்முகப்பரீட்சை நடத்தி நியமனம் வழங்குதல்.

★ பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு உடன் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

★ வேலையற்ற பட்டதாரிகளின் விபரங்களைச் சேகரித்து அவர்கள் மூலம் உரிய வெற்றிடங்களை நிரப்புதல்.

★ யாழ்ப்பாணத்தில் பல்வேறு திணைக்களங்களிலுமுள்ள 53 தொழில் நுட்ப உத்தியோகத்தர் வெற்றிடங்களை பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி உடன் நிரப்புதல்.

★ மாவட்ட வைத்தியசாலைகளில் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறைகளை நிரப்பும் அனுமதியை ஈ.பி.டி.பி.யிடம் வழங்குதல்.

★ யாழ்.வருவதற்கு திருமலையில் தங்கியுள்ள பயணிகளுக்கு கப்பல் வசதி கிடைக்கும் வரை உணவு, தங்குமிட வசதிகளை வழங்குதல்.

போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. [ந[

இலங்கைப் பிரச்சினை குறித்து இந்திய நாடாளுமன்றில் அமளி துமளி

(சென்னை)

யாழ்ப்பாணத் தீவகற்பத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய மத்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டுமெனக்கோரி தி.மு.க மக்களவை உறுப்பினர்கள் நேற்று நாடளுமன்றில் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டனர்.

மதிமுக உறுப்பினர் வை. கோபாலசாமி நாடாளுமன்றத்தின் மையப்பகுதிக்குச் சென்று ஆவேசமா உரையாற்றினார்.

இதையடுத்து இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் இரு அவையிலும் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிக்கையாகச் சமர்ப்பித்தார்.

இதேவேளை நேற்று கோபாலசாமி இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்துப் பேசினார், (ந)

விமானங்கள்யுத்ததளபாடங்கள் கொள்வனவுக்கு அரசு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினருக்கு அவசரமாகவும் அவசியமாகவும் தேவையான நவீன ரக ஆயுத தளபாடங்கள் உட்பட பெருமளவு விமானங்களையும் கொள்வனவு செய்வதற்கு தேசிய பாதுகாப்புச் சபை கூடி தீர்மானித்துள்ளது.

இந்த ஆயுதக் கொள்வனவு தொடர்பாக அண்மையில் கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதுவருடன் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

வடக்குக் கிழக்கில் படையினரின் யுத்த முனைகளில் பாவிப்பதற்குரிய பெருமளவு விமானங்களையும், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கான விமானங்களையும் உடனடியாக கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

அண்மைக் காலங்களில் விமானப் படையினர் புலிகளின் தாக்குதல்களினால் பல விமானங்களை இழந்துள்ள நிலையிலேயே இவ்விமானங்களை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது 50 சத விதமான விமானங்கள், ஹெலிகொப்ரர்கள் பழுதடைந்த நிலையில் தரையில நிறுத்தப்பட்டுள்ளன.

ஆயுத விமானங்கள் கொளவனவு தொடர்பாக ஏழுக்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த ஆயுத உற்பத்தியாளர்கள் கொழும்புக்கு வந்துள்ளனர். இக்குழுக்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழு ஒன்று சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

இந்திய செய்திஊடகங்களின் செய்திக்கு இராணுவத்தரப்பு மறுப்பு

யாழ். குடாநாட்டில் சுமார் 40ஆயிரம் இராணுவத்தினர் அடைபட்டு இருப்பதாகவும் அவர்களை விடுவிப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவியை இலங்கை ஜனாதிபதி கோரியுள்ளதாக இந்திய தூரதர்சன் தொலைக்காட்சியில் தெரிவிக்கப்பட்ட செய்தியில் எவ்வித உண்மையும் கிடையாது.

இவ்வாறு யாழ். பாதுகாப்பு தலைமையகம் நேற்று முன்தினம் விடுத்த செய்திக்

(2ஆம் பக்கம் பார்க்க)

கிளைமோர் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைப் பகுதியில் தீவகத்துக்குச் செல்லும் வீதி ஓரத்தில் கிளைமோர் குண்டு ஒன்று நேற்று மாலை படையினரால் செயலிழக்க வைக்கப்பட்டபோது பலத்த சத்தத்துடன் வெடித்தது.

இதனை அடுத்து யாழ். நகர் குண்டிச் சத்தத்தால் அதிர்ந்தது பதட்டமும் நிலவியது.

பின்னர் நிலைமை வழமைக்கு திரும்பியது.

(வ-ச-12)

வெளிநாட்டுச்...

கட்டளைச் சட்டங்களுக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்

இத்துடன், உள்ளூர் ஊடகங்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் செய்தித்தணிக்கை வெளிநாட்டுச் செய்தி ஊடகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக அவ அவர் மேலு கூறினார் (ச-4)

பாகிஸ்தானின்...

தமது நாடு இராணுவ உதவியை வழங்காது என்றும் பொதுவாக அரசியல் உதவிகள் வழங்கப்படுவதுடன் பிராந்திய ஒத்துழைப்பையும் வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். (வ-ச)

கொழும்பில்...

வேண்டுகோளை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தபால்மா அதிபர் எஸ்.எம்.எஸ். ஜயசிறி தெரிவித்துள்ளார். (வ)

இந்தியப்...

பாதிப்புக்களையும், ஆயிரக்கணக்கான இந்தியப் படையினர் பலியானதையும் தாம் மறந்துவிடவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக இந்தியா தனது படைகளை அனுப்புமானால் அதன் பாதிப்புக்களை ''தமிழ்நாடுதான்'' சந்திக்க வேண்டிவரும் என்றும் இலங்கைப் பிரச்சினை குறித்து புதுடில்லியில் நடந்த மாநாட்டில் தமிழ்நாட்டு அரசை அழைக்காமை குறித்தும் அவர் கவலை தெரிவித்தார்.

இரு மாணவர்கள் இடை நிறுத்தம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள கல்வியியல் கல்லூரி மாணவர்கள் இருவர் புதிய மாணவர்களைப் ''பகிடிவதை''க்கு உள்ளாக்கியமை தொடர்பாக பீடாபதி கே. அழகரத்தினம் அவர்களால் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

2ம் வருட மாணவர்களான பெரியதம்பி செந்தில்நாதன் சிவசுந்தரம் பூமதி ஆகிய இருவருமே இடை நிறுத்தப்பட்டவர்களாவர் இவர்கள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.

(4)

இஸ்ரேல்...

காரிகள் இஸ்ரேலுடனான உறவை மீண்டும் புதுப்பிப்பதற்கும் உதவியைப் பெறுவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கு எதிராக போரிடஅப்போதையஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இஸ்ரேல் நாட்டைப் பயன்படுத்தியிருந்தார்.

முஸ்லிம்களின் எதிர்ப்புக்களை அடுத்து 1991 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா இஸ்ரேலுடனான உறவுகளை நிறுத்தியிருந்தார்.

ஆனால் தற்போது இஸ்ரேலுடனான உறவுகளை தற்போதய அரசு மீண்டும்புதுப்பித்து போருக்கான உதவிகளைப் பெறவுள்ளதாகவும் அறியப்படுகிறது. (ச)

150க்குமேற்பட்ட....

திகளாகச் சென்றுள்ளதாகவும் அவர்கள் அனைவரும் மண்டபம் அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ-ச-4)

மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் நலன் நோன்பு நிலையத்தில் வசிக்கும் இன்னாசி மனோகரன் (வயது 54), சுழிபுரம் குடாக்கனையைச் சேர்ந்த கதிரவேலு சாந்தகுமார் (வயது 20) ஆகிய இருவரும் கடந்த மாதம் 28 ஆம் திகதியும், சுழிபுரம் மத்தியை சேர்ந்த தவசி தவரூபன் (வயது 22) கடந்த மாதம் 27 ஆம் திகதி தாவடி சோதனை நிலையத்தில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாக இவர்களின் உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கு..

நடவடிக்கைகுறித்தும் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இக் கூட்டத்தில் அமைச்சர்களான முரசொலிமாறன், ஜோர்ஜ் பெர்னாண்டஸ், எல்.கே.அத்வானி, ரீ.ஆர். பாலு,ரங்கராஜன் குமாரமங்கலம், பொன்னுச்சாமி மற்றும் வை. கோபாலசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தின் பின் செய்தியாளர்களிடம் பேசிய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவியையோ அல்லது இராணுவத்தளபாட விற்பனையையோ செய்யாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமையை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-30
ஷாலினி, அரவிந்தசாமி
குஷ்பு மாதவன்
நடித்த
அலைபாயுதே
CD பிரதி வெளியீடு

★ ஐ.தே.கட்சி

நாட்டை யுத்தநிலையில் வைத்திருக்கும் அரசின் முடிவை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

[கொழும்பு]

நாட்டை யுத்தநிலையில் வைத்திருப்பதையும் அதற்காக பொதுப்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை வர்த்தகமானி மூலம் பிரகடனப்படுத்தியதையும் எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் 11மணிக்கு இவ்வார்ப்பாட்டம் நடைபெறும்.

பொதுப்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை அமுல்ப்படுத்தியதன் மூலம் அரசு அடக்குமுறையை உருவாக்கியுள்ளது என்றுகுற்றம் சாட்டியுள்ளதுடன் செய்தித் தணிக்கை உண்மையை மறைப்பதாகவுள்ளதெனவும் கூறி இவ் ஆர்ப்பாட்டத்தைநடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

அத்துடன் பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் வடக்குக் கிழக்கு யுத்தத்தில் அதனை வென்றுவிட முடியாதென்றும் அதனைக்கைவிட்டு ஜனநாயக வழிகளைக் கையாள வேண்டும் என்றும் ஐ.தே.க.கோரியுள்ளது.

நாடெங்கிலும்-..

நாட்டை யுத்த நிலையில் வைத்திருப்பதென அமைச்சரவை தீர்மானித்ததுடன் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் உள்ள விசேட விதிமுறைகள் சில நேற்று முன்தினமிரவு (நள்ளிரவு) வர்த்தமானிமூலம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு செயற்பாடும், வெளியீடும், மற்றும் பிரகடனங்களும் தண்டனைக்குரிய குற்றமாக வர்த்தமானி அறிவித்துள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் மிகக்கடுமையான சட்டங்களை அமுல் நடத்த அரசு திட்டவட்டமாகத் தீர்மானித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொருநடவடிக்கையையும் இச்சட்டத்தின் மூலம் தடை செய்ய முடியும் அதன் பிரகாரம்

★ செய்தித்தாள் வெளியிடுவதை நிறுத்தல்

★ அச்சகங்களை கைவசப் படுத்தல்

★ வேலைநிறுத்தல்களை தடைசெய்தல்

★ வாகனங்கள், மற்றும் சொத்துக்களை கோரிப்பெறுதல் ஆகியவற்றுடன், இச்சட்டத்தின் மூலம் அத்தியாவசிய சேவைகளுக்கு தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. (வ)

ஷெல் தாக்குதல்

நாவற்குழி, அரியாலை கிழக்கு ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை 9.00மணியளவில் கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் கண்டிவீதியால் பயணம் மேற்கொண்ட மக்கள் பெரும் பீதியுடன் பயணம் செய்ததைக் காண முடிந்தது.

இ. போ. ச. ஊழியருக்கு நஷ்ட ஈடு

இலங்கைப் போக்குவரத்து சபையில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட 3400 பேருக்குநஷ்ட ஈடுகள் வழங்க போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தைச்சேர்ந்த 2072 பேருக்கான நஷ்ட ஈடு எதிர்வரும் 15ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. இதற்காக 9கோடியே 60இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய மாவட்டங்களில் நஷ்ட ஈடுபெறத் தகுதியானவர்களுக்கு இம்மாத இறுதிக்குள் நஷ்ட ஈடு வழங்கப்படுமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். [4]

கப்பல்...

களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வ.கி மாகாண ஆளுநருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்;

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 05-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.